Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# திருவாசகத்தில் இசைப்பாடல்கள்

48

**பேரா. முனைவர் க. திலகவதி**
இயக்குநர்,தமிழ்ப் பண்பாட்டு மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் -613 010.
மின்னஞ்சல்: thilaga1995@gmail.com.

சைவசமயக் குரவர் நால்வருள் ஒருவராக விளங்கிய மாணிக்கவாசகர் அருளிய நூல் திருவாசகம். திருவாசகம் என்பது 'தெய்வத் தன்மை பொருந்திய மொழி' என்று பொருளாகும். திருவுடைய சொற்களால் ஆகிய அருள்நூல் என்றும், செந்தமிழாகிய மணி வார்த்தைகளால் இறைவனது புகழைப் போற்றியமையால் பாடிய அருளாளர் மாணிக்கவாசகர், மாணிக்கவாசகர் என்றும் அழைக்கப்பெற்றார். இந்நூல் பன்னிரு திருமுறைகளுள் எட்டாம் திருமுறையாக விளங்குகின்றன. திருச்சிற்றம்பலக் கோவையாகிய திருக்கோவையாரும் இதில் அடங்கும். இந்நூல் அகப்பொருள் துறையில் அமைந்துள்ளது. இறைவனால் ஆட்கொள்ளப்பட்டுப் பிரிந்த பின்னர் மீண்டும் இறைவனைச் சேரவேண்டும் என்று வருந்திப் பாடிய பகுதிகள் திருவாசகத்தில் இடம் பெற்றுள்ளன. மாணிக்கவாசகரது இயற்பெயர் திருவாதவூரர். இவர் பிறந்த ஊர் மதுரைக்கு அருகில் உள்ள திருவாதவூர். திருவாசகப் பாடல்கள் உருகி உருகிப் பாடப்பெற்றமையால் பாடுவோர், கேட்போர் உள்ளத்தை உருகச் செய்யும் தன்மை படைத்தவை. இறைவனது பெருமையினையும்,அவன் காட்டிய கருணையினையும் நினைந்து நினைந்து பாடியமையாகும்.

"திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்பது பழமொழி. இராமலிங்க அடிகளார் திருவாசகத்தின் பெருமையை,

"வான் கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவைக் கலந்து என்
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

எனப் போற்றியுள்ளார். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்,

"திருவாசகம் இங்கு ஒரு கால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம் மயிர் பொடிப்ப விதிர் விதிர்ப்பெய்தி
அன்பராகுநர் அன்றி

மன்பதையுலகில் மற்றையர் இலரே”

என இதன் சிறப்பைப் பாடியுள்ளார்.

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பல்வேறு இசைக் குறிப்புகளைத் தந்துள்ளார். எளிய மக்கள் வழக்கில் இருந்த இசைவடிவில் (வர்ணமெட்டுகளில்) பல பாடல்களை இயற்றியுள்ளார். மாணிக்கவாசகர் சொல்ல தில்லை நடராசரால் (கூத்தப் பெருமானால்) எழுதப்பெற்று, கையொப்பமிடப்பட்டு தில்லையில் பொன்னம்பலத்தில் வைக்கப்பெற்ற பெருமையுடைய நூல். இறைவனின் புகழைப் போற்றி இளமகளிர் இசையுடன் பாடியாடும் உத்தியைக் கையாண்டுள்ளார் மாணிக்கவாசகா. திருவெம்பாவை, திரு அம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல், திருப்படையெழுச்சி ஆகியவற்றில் உள்ள இசைப்பாடல்களின் சிறப்பு, இசைக்கருவிகளின் சிறப்பு, ஓசைநயம், பண்சிறப்பு ஆகியவற்றை ஆராய்வதன் மூலம் திருவாசகத்தின் இசைச் சிறப்பினை அறியலாம். ஓவ்வொரு பதிகமும் 20 பாடல்களைக் கொண்டு அமைந்துள்ளன.

**திருவெம்பாவை**

மார்கழி திங்களில் பெண்கள் (சிவனை) இறைவனைத் துதித்துப் பாடியருளும் நீராடல் (நோன்பாகிய) வழிபாடாகும். ‘எம்பாவாய்’ என்று ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் முடிகின்றமையால் ‘திருவெம்பாவை’ என்றும் பெயருடையதாயிற்று. விடியலில் பெண்கள் பலர் கூடி, பிற பெண்களின் இல்லந்தோறும் சென்று அவர்களையும் எழுப்பிக் கொண்டு, ஆற்றுக்கு, குளத்துக்கு நீராடச் செல்லும் வழக்கத்தை ஒட்டி அமைந்துள்ளது. பக்குவம் முதிர்ந்த ஆன்மா, மலஇருளில் அழுந்திக் கிடக்கும் பக்குவம் பெறாத ஆன்மாவை எழுப்பி இறைவனது அருள்நீரில் திளைப்பதற்கு அழைத்துச் செல்வதாக இதற்குத் தத்துவப் பொருள் உரைப்பர்.

இறைவனிடம் அன்பு செலுத்துவோர், அவனது உருவத் திருமேனியை நினைந்து அவனது அருட்செயல்களைப் பாடுவர் என்பதையும், இறைவன் பாடி மனங்குழையும் அன்பர்க்குத் தானே எளிவந்தருளுவன் என்பதையும்,

“…… அறிவரியான்
கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடி” (திருவெம்.5)
“தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய்” (திருவெம்.6)

என்று மாணிக்கவாசகர் பாடியுள்ளதால் இசைப்பாடலின் சிறப்பை அறியலாம். கோழி கூவுதலும்,

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பறவைகள் ஒலித்தலும், இசைக் கருவிகள் (ஏழில்) இசைத்தலும், வெண் சங்கு முழங்குதலும் பொழுது புலர்வதை அறிவிப்பன. கோயிலின் புறத்தே நிகழும் இயற்கைக் காட்சியையும், கோயிலின் உள்ளே நிகழும் செயற்கைக் காட்சியையும் வருணித்து, இறைவனது புகழைப் போற்றுகிறார்.

“கோழி சிலம்பப் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண் சங்கெங்கும்
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம்” (திருவெம்.7)

என்ற பாடலில் ‘ஏழில்’ என்னும் இசைக்கருவியையும், சங்கினையும் குறிப்பிட்டுள்ளார்.

இளம்பெண்டிர் நீரில் வேகமாகக் குடைந்தாடில் இறைவன் புகழைப் பாடிய அழகுநலத்தை மாணிக்கவாசகர்,

“காதார் குழையாடப் பைம்பூண் கனலாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்” (திருவெம்.14)

என்று எட்டு இடங்களில் ‘பாடி’ என்ற சொல்லைப் பயன்படுத்துவதன் மூலம் பெண்டிர் பாடிய இசைப்பாடலின் சிறப்பை உணர்த்துகிறார். “போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர் …. போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்” (திருவெம்.20) என நீராடலை ‘மார்கழிநீராடல்’ என்ற சொற்றொடரால் குறிப்பிட்டுள்ளார்.

**திருஅம்மானை**

மகளிர் இசைப்பாடலுடன் மகிழ்ந்து விளையாடும் விளையாட்டுக்களுள் ஒன்று. அம்மானைக்காய் கொண்டு விளையாடும் இளமகளிர் தம்முள் உரையாடும் முறையில் மகிழ்ந்து பாடும் வரிப்பாடல்களாகும். மூன்று பெண்கள் கூடி மூன்று காய்களை வைத்துக்கொண்டு ஆடுவது. இறைவன் அல்லது அரசன் போன்றோரைப் புகழ்ந்து பாடுவது மரபு. ஒருத்தி சிவபெருமானின் புகழ்ச்செயலைக் குறித்து வினா எழுப்ப, அடுத்தவள் அவ்வினாவிற்கு விடை கூற மூன்றாமவள் அப்புகழ்ச்செயலைப் பாராட்டும் வகையிலும், மூவரும் சேர்ந்து பாடும் முறையிலும் அம்மானைப் பாடல்கள் அமையும். இப்பாடல்கள் இனிய பண்களில் ஆறடிகளால் இயன்ற கொச்சக ஒருபோகாக அமைந்துள்ளது. திருவம்மானைப் பாடல் ஒவ்வொன்றின்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இறுதியிலும் "பாடுதுங்காண் அம்மானாய்" என்று மாணிக்கவாசகர் அழகுற வருணித்துள்ளார்.

"….. பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலமன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்" (திருஅம்மானை. 5)

திருப்பெருந்துறையில் ஆட்கொண்ட பெருமான் தில்லையில் இருக்கக் கண்டமையால், தில்லை சென்று சிற்றம்பலம்என்றும் மாணிக்கவாசகர் வரலாறு இங்குச் சுட்டப்படுகின்றது. இறைவன் இசைத்தமிழால் (கீதம்) பாடுவோர்க்கு மிகுந்த திருவருளைத் (பரிசு) தர வல்லவன் என்பதையும், எளியோர்க்கு இரங்கும் உள்ளத்தன் என்பதையும் மாணிக்கவாசகர்,

"பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன்
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்" (திருஅம்மானை.8)

என்று இசைக்கு மயங்கும் இறைவனது இயல்பு சிறப்பிக்கப்படுகின்றதைக் காணலாம்.

**திருப்பொற்சுண்ணம்**

திருக்கோயில்களில் இறைவனது திருமெய்ப்பூச்சுக்கு (திருமேனிக்கு) உரிய மணப்பொடியினை மகளிர் உரலில் இட்டு இடிக்கும்போது பாடும் பாட்டாகச் செய்யப்பட்டமையால் திருப்பொற்சுண்ணம் என அழைக்கப்பட்டது. மாணிக்கவாசகர் இளமகளிர் பாடும் வரிப்பாடல்களாகச் சிறப்பாக உள்ளம் உருக வருணித்துள்ளார். சிலப்பதிகாரத்தில் வரும் வள்ளைப்பாட்டினையம், அடியார்க்கு நல்லார் உரையில் சுட்டப்படும் அவலிடி என்னும் வரிப்பாடலையும் ஒத்த அமைப்புடையதாகத் திருப்பொற்சுண்ணப் பாடல் அமைந்துள்ளது என்பது ஒப்புநோக்கத்தக்கது.

அடியார்களிடத்திலும், கோயில்களிலும் இறைவன் விளக்க முற்று இருத்தலையும், உலக்கை, உரல்கொண்டு பொற்சுண்ணம் இடித்தலையும்,

"காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாருங்கச்சித்
திருவேகம் பன் செம்பொற் கோயில்பாடிப்

பாச வினையைப் பறித்துநின்று

பாடிப்பொற் சுண்ணம் இடித்தும் நாமே" (திருப்பொற்.4)

என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

"சத்தியும் சோமியும் பார்மகளும்

நாமக ளோடுபல் லாண்டிசைமின்"

உலக்கை பல ஓச்சு வார்பெரியர்

உலகமெ லாம் உரல் போதாதென்றே

கலக்க அடியார் வந்துநின்றார்

காண உலகங்கள் போதாதென்றே

நலக்க அடியோமை ஆண்டு கொண்டு

நாண்மலர்ப் பாதங்கள் கடத்தந்த

மலைக்கு மருகனைப் பாடிப்பாடி" (திருப்பொற்.6)

என்று பொற்சுண்ணம் இடித்தலில் உள்ள ஆர்வத்தைக் குறிப்பிடுகிறார். மேலும், நம்மை இம்மை ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி (8) பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடி (11) கூத்தனை நாத்தமும்பேற வாழ்த்தி (15), சேவகன் நாமங்கள் பாடிப்பாடி (16), வையகம் எல்லாம் உரலாக, மாமேரு என்னும் உலக்கை நாட்டி, மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி, செய்ய திருவடி பாடிப்பாடிச் செம்பொன் உலக்கை வலக்கை பற்றி … ஆடப் பொற்சுண்ணம் இடித்து (9) எனப் பொற்சுண்ணத்தின் சிறப்பை வருணித்துள்ளார். "தோகை மாமலர்க் கொன்றை பாடி" என்னும் பாடலில் (17) இறைவனது அறக்கருணையும்,"அயன் தலை கொண்டு செண்டாடல் பாடி" என்னும் பாடலில் (18) இறைவனது மறக் கருணையும், வட்டமலர்க் கொன்றை மாலைபாடி மத்தடும்பாடி மதியமும் பாடிச் சிட்டர்கள் வாழும் தென்தில்லை பாடிச் சிற்றம்பலத்தெங்கள் செல்வம் பாடி" என்னும் பாடலில் (19) இறைவனது அணியும் சிறப்பித்துப் பாடியதை அழகுற வருணித்துள்ளார்.

**திருக்கோத்தும்பி**

'கோத்தும்பி' என்பது அரசவண்டு என்று பொருள்படும். அரசவண்டை அழைத்து இறைவன் திருவடிக் கமலத்தில் சென்று ஊதுவாய் என்று கூறுவது போலப் பாடப்பட்டுள்ளது. வண்டு மலர்களில் உள்ள தேனைப் பருகி, அதனைச் சுற்றிப் பறத்தலைப் போன்று, இளமகளிர் கைகோத்துக் கொண்டு சுற்றி விளையாடும் விளையாட்டு தும்பி பறத்தல் என அழைக்கப்பட்டது. இவ்விளையாட்டில் ஈடுபடும் மகளிர் இறைவனின் திருப்புகழை அழகிய இசையில் அமைத்துப் பாடி மகிழ்வது மரபு. இறைவனது திருப்புகழை இடைவிடாது இசைக்கும் வண்ணம் மணிவாசகர் இதனை யாத்துள்ளார்.

"நானார்என் உள்ளமார் ஞானங்க ளார்என்னை யாரறிவார்" (2)

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்" (4)

மரணம் பிறப்பு என்ற இவை இரண்டின் மயக்கறுத்த" (9)

"நாயேனை தன்னடிகள் பாடுவித்த நாயகனை" (12)

என்று தும்பியிடம் கூறி இறைவன் திருவடிக்கண்ணே சென்று ஊதுவாயாக என்று பாடியுள்ளார். மேலும் தும்பியரிடம் தினைத்தனை தேனை உண்ணாதே, நினைக்குந்தொறும், காண்தொறும், பேசுந்தொறும் எப்போதும் அனைத்து எலும்பு உள்நெக, பேரின்பத்தேனைப் பொழிகின்ற குனிப்புடையானிடத்தே போய் ஊதுவாயாக, என்று தினைத்தேனைத் தினையளவு என்றது உலக இன்பம் சிறிது என்பதையும், ஆனந்தத்தேன் என்றது இறையின்பம் அளவற்றது, திகட்டாதது, பெரியது என்பதையும் உணர்த்தும் பொருட்டேயாகும்.

**திருத்தெள்ளேணம்**

பெண்டிர் சிறிய முறத்தைக் கையில்கொண்டு தானியங்களைத் தெள்ளிக் கொழித்து விளையாடும்பொழுது இறைவனது புகழைப் பாடி மகிழ்வது மரபு. மாணிக்கவாசகர் இறைவனது புகழ்த் திறங்களைப் பாடிப் போற்றுவதாக அமைந்த பாடல் திருத்தெள்ளேணம் ஆகும்.

"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை

உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்

ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம்

திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ" (1)

என்று பாடிப் போற்றுவதைக் காணலாம்.

**திருச்சாழல்**

சாழல் என்பது மகளிர் விளையாடல்களுள் ஒன்றாகும். இரண்டு அணியாய்ப் பிரிந்து விளையாடுவது. இவ்விளையாட்டில் பாடப்படும் பாடல் ஒரு திறத்தாரது கொள்கைக்குத் தடையாய் உள்ள வினாவை மற்றொரு திறத்தார் வினாவுவதும், அதற்கு அவர்கள் விடை சொல்வதுமாய் அமைவது.

"பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்

பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ!

பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை

ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ" (1)

என்று இறைவனது கருணையைப் போற்றுகின்றார்.

**திருப்பொன்னூசல்**

பொற்பலகை மாட்டப்பட்ட ஊஞ்சல் பொன்னூசலாம். ஊஞ்சல் ஊசல் என்றும் அழைக்கப்படுகிறது. ஊசலில் இருந்து ஆடுவோர் பாடும் பாட்டு ஊசற்பாட்டாகும். ஆட்டுவோர்

பாடுதலும் உண்டு. ‘ஊசல் வரி’ (வாழ்த்துக்காதை) எனச் சிலம்பு சுட்டும், இவ்வாறு ஆடுங்கால் இறைவனின் புகழ்த்திறத்தைப் பாடி, ஆடுவது மரபு - ஒன்பது திருப்பாடல்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ‘பொன்னூசல் ஆடாமோ’ என்னும் சொற்றொடர் அமைந்துள்ளது.

“சீரார் பவளங்கால் முத்தம் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ” (1)

“அன்னத்தின் மேலேறி ஆடும் அணிமயில் போல்” (7)

என்று பொன்னூசலின் அழகும் வனப்பும். வருணிக்கப்பட்டுள்ளன. அன்னம் ஊஞ்சலுக்கும், அணிமயில் அதில் ஆடும் பெண்களுக்கும் உவமையாயிற்று.

**திருப்பள்ளியெழுச்சி**

இறைவனைப் பள்ளியினின்றும் (துயில்எழ) எழச்சொல்லிப் பாடப்படும் இசைப்பாடலாகும். இறைவன் பள்ளி கொள்ளுதல் என்பது நம் உள்ளத்தில் தோன்றாது மறைந்திருத்தல் என்றும் (திரோதானம்) அவன் துயில் எழுதல் அம்மறைவு நீங்கி வெளிப்பிட்டுத் தோன்றுதல் என்றும் பொருள்படும். பத்துப் பாடல்களைக் கொண்டுள்ளது. இதில் வீணை, யாழ் போன்ற இசைக்கருவிகள் சுட்டப்பட்டுள்ளன.

“இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்” (4)

“கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறிவாரை” (5)

என்று கருவியிசையாலும், மிடற்றிசையாலும் பாடி இறைவனைத் துதித்தநிலையைப் போற்றுகின்றார்.

**தொகுப்புரை**

- மாணிக்கவாசகர் சாதாரண மக்கள்வழக்கில் இருந்த இசைப்பாடல்களைப் பாடியுள்ளார்.
- இளமகளிர் நீராடல் தனியொரு இலக்கியவகையாகவும், இசைவடிவமாகவும் மாற்றத்தைச் செய்தவர்.
- திருவெம்பாவையும், திருப்பள்ளியெழுச்சியும் சைவசமய உலகில் தனிச் சிறப்பிடம்

பெற்றது என்பதை அறியலாம்.

- இசைப்பாடல்கள் ஆடல், பாடல், கருவியிசை என்ற வகையில் இடம் பெற்றுள்ளன.
- மகளிர் விளையாட்டின் ஊடே பாடப்படும் இலக்கிய வகையை, இறைவன் பெருமையைப் போற்றும் வகையிலும் உத்தியாகக் கையாண்ட சிறப்புக்குரியவர் மாணிக்கவாசகர்.
- திருவாசகப் பாடல்கள் வடிவச் சிறப்பு பாநயம், இனியஓசை, கருத்துவளம், சொல்லாட்சி, உவமை ஆகியவற்றில் சிறந்துவிளங்குகின்றன.
- பாடுவோர், கேட்போர் உள்ளத்தை உருக்கி, இறைவயப்படும் தன்மையைச் செய்யும் ஆற்றலுடையன என்பதை உணரலாம்.

**துணைநூல்கள்**

வரதராஜன், ஜி., திருவாசகம் விரிவுரை, பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி, 1971.

தனபாண்டியன், து.ஆ., இசைத்தமிழ் வரலாறு, இரண்டாம் பகுதி, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2006.